(ஒன்பதாவது பாராளுமன்றம் - நான்காவது கூட்டத்தொடர்)

**இல. 55.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2023 செப்தெம்பர் 07, வியாழக்கிழமை, மு.ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

7/2023

கௌரவ சமிந்த விஜேசிறி,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நல்லாட்சி அரசாங்கத்தின் ஆட்சிக்காலத்தில் இடம்பெற்ற மத்திய வங்கி மோசடி தொடர்பில் விசாரிப்பதற்காக சனாதிபதி ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்ட திகதி யாது;

(ii) மேற்படி ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்டுள்ள நடவடிக்கைக் குறிப்புகளுக்கேற்ப மேற்கூறப்பட்ட செயற்பாடு தொடர்பில் நேரடியாகவும் மறைமுகமாகவும் தொடர்புபட்டுள்ளார்களென குற்றஞ் சாட்டப்பட்ட நபர்களின் எண்ணிக்கை யாது;

(iii) மேற்படி நபர்களின் பெயர்கள் மற்றும் பதவிப் பெயர்கள் யாவை;

(iv) மேற்படி நபர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள சட்ட நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2.

387/2023

கௌரவ சட்டத்தரணி வசந்த யாப்பாபண்டார,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2021 ஆம் ஆண்டு மழைக்காலத்தில் மண்சரிவுக்கு உள்ளான கொழும்பு-கண்டி பிரதான பேருந்து வீதியில், பஹல கடுகண்ணாவைப் பிரதேசத்தின், மேற்பகுதியில் புகையிரத வீதிக்கு அருகிலுள்ள பிரதேசத்தில் மண்சரிவு அபாயம் இதுவரையிலும் நீங்கவில்லை என்பதையும்;

(ii) மேற்படி பிரதேசத்தினது மண் அடுக்கின் கீழ் காணப்பட்ட நீர் வடிப்பினை தேசிய கட்டட ஆராச்சி நிறுவனம் அகற்ற நடவடிக்கை எடுத்தபோதும், அந்தப் பிரதேசம் தொடர்ந்தும் தீவிர அபாய வலயமாக அறிவிக்கப்பட்டுள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) அந்தப் பிரதேசத்தை அபாய நிலையிலிருந்து மீட்க இன்றளவில் எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) கொழும்பிலிருந்து கண்டி நோக்கிப் பயணிப்பதற்கு உள்ள மாற்று வீதிகளை அபிவிருத்தி செய்வதில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) கடுகண்ணாவை தொடக்கம் பலன புகையிரத நிலையம் வரையுள்ள புகையிரத வீதி எப்போதும் மண்சரிவைச் சந்திக்கும் அபாயத்தைக் கொண்டுள்ளதால், அதுகுறித்து ஏதேனும் நடவடிக்கையை மேற்கொள்ள முடியுமா என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3.

423/2023

கௌரவ கயந்த கருணாதிலக்க,— மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மின்சாரப் பட்டியல்களுக்கான செலவுகளைக் குறைப்பதன் நோக்கத்துடன் அரச ஊழியர்கள் சார்பில் 2021 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்ட ‘சூரிய மின்சக்தி வசதிக்கான விசேட கடன் திட்டம்’ நடைமுறையிலுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அக்கடன் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(iii) அக்கடன் திட்டத்தின் கீழ் அரச ஊழியர் ஒருவருக்கு வழங்குவதற்காக உத்தேசித்துள்ள கடன் தொகை மற்றும் அதற்குரிய வட்டி வீதம் என்பன யாவையென்பதையும்;

(iv) அக்கடன் திட்டத்தின் கீழ் இன்றளவில் கடன் வழங்கப்பட்டுள்ள அரச ஊழியர்களின் எண்ணிக்கை மற்றும் வழங்கப்பட்டுள்ள கடன் தொகை என்பன யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

436/2023

கௌரவ புத்திக பத்திறண,— வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) ஒரு கிலோகிராம் நிறையுடைய முழு ஆடைப் பால்மா மற்றும் ஆடைநீக்கிய பால்மா பக்கெட் ஒன்றும் 400 கிராம் நிறையுடைய முழு ஆடைப் பால்மா மற்றும் ஆடைநீக்கிய பால்மா பக்கெட் ஒன்றும் —

(i) விற்பனை செய்யப்படும் விலை;

(ii) அவற்றைப் பயன்படுத்தி தயார் செய்யக்கூடிய பால் லீற்றர்களின் அளவு;

(iii) அவற்றைத் தயாரிப்பதற்கு பயன்படுத்தப்படும் திரவப்பால் லீற்றர்களின் அளவு;

ஒவ்வொரு கம்பனியின் அடிப்படையில் தனித்தனியே யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இலங்கையில் விற்பனை செய்யப்படுகின்ற திரவப்பால் பக்கெட்களின் கொள்ளளவு மற்றும் மேற்படி கொள்ளளவுக்கு அமைய ஒவ்வொரு திரவப்பால் பக்கெட்டின் விலை என்பன தனித்தனியே யாவையென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5.

690/2023

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மட்டக்களப்பு மாவட்டத்தின், களுவாஞ்சிக்குடி பிரதேச செயலாளர் பிரிவின் துறைநீலாவணை பிரதேசத்தில் காணப்படுகின்ற கிராமிய வைத்தியசாலை இன்றளவில் பிரதேச வைத்தியசாலையாக தரமுயர்த்தப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) மேற்படி வைத்தியசாலைக்காக இரண்டு மருத்துவர்களை நியமிக்க வேண்டியபோதிலும், இன்றளவில் ஒரு வைத்தியர் மட்டுமே நியமிக்கப் பட்டுள்ளார் என்பதையும்;

(iii) அந்த மருத்துவருக்கு வேறொரு வைத்தியசாலையிலும் பணிகளை கவனிக்க வேண்டியிருப்பதால், குறித்த பிரதேசத்தில் உள்ள மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதையும்;

(iv) ஆரம்ப காலத்தில் இந்த மருத்துவமனையில் நோயாளர் காவு வண்டியொன்று இருந்தபோதிலும் தற்போது நோயாளர் காவு வண்டியொன்று இல்லை என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) மேற்படி வைத்தியசாலைக்காக இதுவரை நிரந்தர வைத்தியர் ஒருவரை நியமிக்காததன் காரணம் யாது என்பதையும்;

(ii) அந்த வைத்தியசாலைக்கு நோயாளர் காவு வண்டி ஒன்றை வழங்காமைக்கான காரணம் யாது என்பதையும்;

(iii) மேற்படி வைத்தியசாலைக்காக நிரந்தர மருத்துவர் ஒருவரை நியமிக்கவும், நோயாளர் காவு வண்டி ஒன்றை வழங்கவும் எடுக்கும் நடவடிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

6.

818/2023

கௌரவ ஜகத் குமார சுமித்ராரச்சி,— பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2022.05.09 ஆம் திகதியும் அதனை அண்மித்த நாட்களிலும் ஏற்பட்ட கலவரச் சூழலில் பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட பொது மக்களின் வீடுகள் மற்றும் சொத்துக்களுக்கு சில நபர்களால் சேதங்கள் விளைவிக்கப்பட்டதென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி ஆட்கள் தொடர்புபட்டுள்ள அரசியல் கட்சிகள் யாவை என்பதையும்;

(iii) வீடுகள் மற்றும் சொத்துக்களை இழந்த ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினர், நகர முதல்வர், பிரதேச சபை தவிசாளர், நகர சபை உறுப்பினர் மற்றும் பிரதேச சபை உறுப்பினர் உள்ளிட்ட பொது மக்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிட்ட நாட்களில் பொதுச் சொத்துக்களுக்கு சேதம் விளைவிப்பதற்கு இணைந்த ஆட்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அவ்வாறு சேதப்படுத்தப்பட்ட பொதுச் சொத்துக்களின் பெறுமதி எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி (i) இல் குறிப்பிடபட்டுள்ள ஆட்கள் தொடர்பாக இன்றளவில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

7.

837/2023

கௌரவ சட்டத்தரணி பிரேம்நாத் சி.தொலவத்த,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கொழும்பு மாவட்டத்தில் மத்திய அரசாங்கத்திற்கும் மாகாண சபைக்கும் சொந்தமான பாடசாலைகளுக்கு மத்தியில் ஆசிரியர் வெற்றிடங்கள் காணப்படுகின்றதும், குடிநீர் வசதி, மலசலகூட வசதி, ஆய்வுகூட, நூலக மற்றும் விளையாட்டு வசதிகளைக் கொண்டிராததுமான பாடசாலைகளின் எண்ணிக்கை ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவு வாரியாக வெவ்வேறாக யாது;

(ii) மேற்படி ஒவ்வொரு பாடசாலையினதும் பெயர் மற்றும் முகவரி வெவ்வேறாக யாது;

(iii) மேற்படி பாடசாலைகளில் காணப்படும் குறைபாடுகளைப் பூர்த்தி செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா;

(iv) ஆமெனில், அதற்காக எடுக்கப்படும் காலம் யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

8.

3521/2023

கௌரவ உத்திக பிரேமரத்ன,— வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அனைத்து வகையிலான திரைப்படங்களையும் திரையிடக்கூடிய வசதிகளைக் கொண்ட இலங்கையின் திரையரங்குகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி திரையரங்குகள் மூலம் ஈட்டப்படுகின்ற வருடாந்த வருமானம் எவ்வளவென்பதையும்;

(iii) இலங்கையில் திரைப்படக் கைத்தொழில் மூலம் ஈட்டப்படுகின்ற வருமானத்தை அதிகரிப்பதற்கு திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iv) ஆமெனில், அத்திட்டங்கள் யாவை என்பதையும்;

(v) திரைப்படக் கைத்தொழிலின் எதிர்காலம் மற்றும் வளர்ச்சிக்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(vi) ஆமெனில், அத்திட்டங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

9.

3539/2023

கௌரவ விமலவீர திசாநாயக்க,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை இலங்கை மேற்கொண்டுள்ள ஏற்றுமதிகளின் பெறுமதி;

(ii) மேற்குறிப்பிட்ட காலப்பகுதியில் இலங்கை மேற்கொண்டுள்ள ஏற்றுமதி களிலிருந்து பெறப்பட்டுள்ள அந்நியச் செலாவணி வருமானம்;

ஐக்கிய அமெரிக்க டொலர்களில் எவ்வளவு என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2010 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை இலங்கைக்கு மேற்கொள்ளப்பட்டுள்ள இறக்குமதிகளுக்காக அங்கீகரித்துக்கொள்ளப்பட்ட அந்நியச் செலாவணியின் அளவு;

(ii) மேற்குறிப்பிட்ட காலப்பகுதியில் இலங்கைக்கு மேற்கொள்ளப்பட்டுள்ள இறக்குமதிகளின் பெறுமதி;

ஐக்கிய அமெரிக்க டொலர்களில் எவ்வளவு என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

10.

3549/2023

கௌரவ லலித் வர்ண குமார,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) களுத்துறை, ஹொரணை மற்றும் மத்துகம ஆகிய ஒவ்வொரு கல்வி வலயத்திலுமுள்ள தமிழ் மொழிமூல பாடசாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு கல்வி வலயத்திலும் இன்றளவில் நிலவும் தமிழ் மொழிமூல ஆசிரியர் வெற்றிடங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) அண்மையில் கல்வியியற் கல்லூரி டிப்ளோமாதாரிகளுக்கு ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்பட்டபோது, மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு கல்வி வலயத்திற்கும் நியமிக்கப்பட்ட தமிழ் மொழிமூல ஆசிரியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் வெவ்வேறாக குறிப்பிடுவாரா?

(ஆ) (i) சுமார் 620 மாணவர்கள் கல்வி கற்கும் களுத்துறை கல்வி வலயத்தில் அமைந்துள்ள களு/அல்-ஹசனியா மகா வித்தியாலயத்தில் கணிதப் பாட ஆசிரியர் வெற்றிடம் உள்ளிட்டதாக இன்றளவில் 15 ஆசிரியர் வெற்றிடங்கள் காணப்படுகின்றதென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iii) மேற்குறிப்பிட்ட பாடசாலையில் போதுமானளவு கட்டட வசதிகள் இல்லை என்பதை அறிவாரா என்பதையும்;

(iv) கொடைவள்ளல்களின் ஒத்துழைப்புடன் நிர்மாணிக்கப்பட்டு வரும் 12 வகுப்பறைகளைக் கொண்ட மூன்று மாடி கட்டடத்தின் நிர்மாணப் பணிகள் தற்பொழுது இறுதிக் கட்டத்தில் உள்ளதென்பதை அறிவாரா என்பதையும்;

(v) மேற்படி 12 வகுப்பறைகளுக்கும் மேசை மற்றும் கதிரை வசதிகளை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வுகள்,— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8 இன் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், இன்றைய தினம் சபை அமர்வு நேரம் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 12.30 மணி வரையும் மற்றும் பி.ப. 1.00 மணி முதல் பி.ப. 7.30 மணி வரையும் இருக்குமாக. பி.ப. 7.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

1.

சுகாதார அமைச்சர் கௌரவ கெஹெலிய ரம்புக்வெல்ல அவர்களுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2023 செப்தெம்பர் 06) "தற்போது சுகாதாரத் துறையில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைக்கான தீர்வுகள் இதுவரை முன்வைக்கப்படவில்லை என்பதாலும்;

தினந்தோறும் வைத்தியசாலைகளில் பதிவாகும் மனம் வருந்தத்தக்க சம்பவங்களுள் பெரும்பாலானவை தரமற்ற அல்லது தரம் குறைந்த மருந்து வகைகளைப் பயன்படுத்துவதன் காரணமாக ஏற்படுகின்ற மரணங்கள் மற்றும் அபாயங்களாக உள்ளதென்பது புத்திஜீவிகளின் கருத்தாக அமைந்துள்ளதாலும்;

தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபைக்கு பணிப்பாளர் சபையை முழுமையாக நியமிக்காமை, தரம் குறைந்த மருந்து வகைகளை இறக்குமதி செய்தல், கேள்விப்பத்திர நடைமுறைக்குப் புறம்பாக மருந்துகளை இறக்குமதி செய்தல், அதிக விலைக்கு மருந்துகளை இறக்குமதி செய்தல், வைத்தியசாலைக் கட்டமைப்பினுள் அத்தியவசிய மருந்துகளுக்கான தட்டுப்பாடு, ஆய்வுகூட உபகரணங்களில் காணப்படும் தட்டுப்பாடு, பதிவு செய்யப்படாத மருந்துகளை அவசரமாக கொள்வனவு செய்தல் மற்றும் அவற்றைப் பயன்படுத்துவதன் காரணமாக இடம்பெற்ற மரணங்கள் மற்றும் அபாயங்கள் ஆகிய விடயங்களின்போது சுகாதார அமைச்சர் என்ற வகையில் இந் நிலைமைகளுக்குப் பொறுப்புக்கூற வேண்டும் என்பதாலும்;

அரசியலமைப்பின் 27 ஆம் உறுப்புரையின் பிரகாரம் அரச கொள்கையின் வழிகாட்டிக் கோட்பாடுகளைப் பாதுகாப்பதற்கு அரசாங்கம் கட்டுப்பட்டுள்ள போதிலும், மேற்படி கோட்பாடுகள் மீறப்படாத வகையில் இந்நாட்டுக்கு மருந்துகளை இறக்குமதி செய்வதற்கான செயல்முறையினை சரியாக ஒழுங்குபடுத்துவதற்கு சுகாதார அமைச்சர் தவறியுள்ளதாலும்;

அரசியலமைப்பின் 53 ஆம் உறுப்புரையின் பிரகாரம் வழங்கியுள்ள உறுதியுரையை மீறி மக்களுக்குரிய பாதுகாப்பான சுகாதார சேவையை சீரழிப்பதற்கு சுகாதார அமைச்சர் செயற்பட்டுள்ளதாலும்;

அரசியலமைப்பின் 28 ஆம் உறுப்புரையின் பிரகாரம் அமைச்சர் தனது அடிப்படைக் கடமைகளை புறக்கணித்தல் மற்றும் அவரது பொறுப்பற்ற செயற்பாடு காரணமாக மக்கள் தமது உயிர்களை பலிகொடுக்க வேண்டிய நிலை ஏற்படுள்ளதாலும்;

சுகாதார அமைச்சர் கௌரவ கெஹெலிய ரம்புக்வெல்ல அவர்கள் தொடர்ந்தும் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சராக பதவி வகிப்பதற்கான இயலுமை தொடர்பில் நம்பிக்கையை இழந்திருப்பதாக இப்பாராளுமன்றம் தீர்மானம் நிறைவேற்றுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப் பெற்றது. [பா.29/2023]

*2.

உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2023 செப்தெம்பர் 06) [1].

*3.

சமூகப் பாதுகாப்பு உதவுதொகை அறவீடு (திருத்தச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2023 செப்தெம்பர் 06) [1].

*4.

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்,— தொல்பொருளியல் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (188 ஆம் அத்தியாயமான) 1940 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க தொல்பொருளியல் கட்டளைச் சட்டத்தின் கீழ் 46 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 47(1) ஆம் பிரிவின் கீழ் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரால் 2023 மே 25 ஆம் திகதி ஆக்கப்பட்டதும் 2023.07.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*5.

இலங்கை தேசிய கண் வங்கி நம்பிக்கைப் பொறுப்புச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*6.

குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*7.

தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*8.

சிரேட்ட அறிவுறுத்தும் சட்டத்தரணிகள் என்ற கௌரவிப்பை அளித்தல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*9.

பிரிவிடல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*10.

கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*11.

நீதிமன்றம், நியாயசபை அல்லது நிறுவனமொன்றை அவமதித்தல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*12

இலங்கைத் துறைமுக அதிகாரசபை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*13.

விலங்கின நலம்பேணல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*14.

கப்பற்றொழில் முகவர்களுக்கு, சரக்கனுப்புநர்க்கு, கலன்செயற்படுத்தாப் பொதுக்காவுநர்க்கு மற்றும் கொள்கலன் செயற்படுத்துநர்க்கு உரிமமளித்தல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*15.

துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர்,— குடியியல் வான்செலவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.1),— 2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, குடியியல் வான்செலவுச் சட்டத்தின் 6,10,11,13,14,16 மற்றும் 31 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 117 ஆம் பிரிவின் கீழ் துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2022 ஆகஸ்ட் 09 ஆம் திகதிய 2292/34 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.05.26 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*16

துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர்,— குடியியல் வான்செலவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.2),— 2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, குடியியல் வான்செலவுச் சட்டத்தின் 6, 10, 11, 26, 31(ஈ), (உ),(ஊ),(எ) மற்றும் (ஏ) ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 117(2)(ஞ) பிரிவின் கீழ் துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2023 ஏப்ரல் 03 ஆம் திகதிய 2326/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.08.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*17.

நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்,— கூட்டிணைக்கப்பட்ட சட்டக்கல்விப் பேரவைக் கட்டளைச் சட்டத்தின் கீழ் விதிகள்,— (276 ஆம் அத்தியாயமான) கூட்டிணைக்கப்பட்ட சட்டக்கல்விப் பேரவைக் கட்டளைச் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் கீழ் நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு அமைச்சரின் ஒருமைப்பாட்டுடன் கூட்டிணைக்கப்பட்ட சட்டக்கல்விப் பேரவையினால் ஆக்கப்பட்டு, 2023 மே 15 ஆம் திகதிய 2332/02 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.07.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான விதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*18.

நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்.— மத்தியஸ்த (விசேட வகுதிளைச் சார்ந்த பிணக்குகள்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2003 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க மத்தியஸ்த சட்டத்தின் 4 (2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட்ட வேண்டிய 27 ஆம் பிரிவின் கீழ் நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2023 சனவரி 14 ஆம் திகதிய 2314/80 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.08.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*19.

நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்.— நீதித்துறைச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க நீதித்துறைச் சட்டத்தின் 29அ(2) ஆம் பிரிவின் கீழ், நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2023 ஏப்ரல்.21 ஆம் திகதிய 2328/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.08.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*20

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மற்றும் கைத்தொழில் அமைச்சர்,— கம்பெனிகள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பெனிகள் சட்டத்தின் 222 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 527 ஆம் பிரிவின் கீழ் கைத்தொழில் அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2023 மார்ச் 17 ஆம் திகதிய 2323/41 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.08.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*21

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர்,— ஆட்களைப் பதிவுசெய்தல் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1968 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, ஆட்களைப் பதிவுசெய்தல் சட்டத்தின் 52 ஆம் பிரிவின் கீழ் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரால் 2023 ஆகஸ்ட் 09 ஆம் திகதி ஆக்கப்பட்டதும் 2023.08.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*22.

துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர்,— கப்பற்றொழில் முகவர்களுக்கு கப்பற்சரக்கனுப்புநர்க்கு, கலன் செயற்படுத்தாப் பொதுக்காவுநர்க்கு மற்றும் கொள்கலன் செயற்படுத்துநர்க்கு உரிமமளித்தல் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1972 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, கப்பற்றொழில் முகவர்களுக்கு கப்பற்சரக்கனுப்புநர்க்கு, கலன் செயற்படுத்தாப் பொதுக்காவுநர்க்கு மற்றும் கொள்கலன் செயற்படுத்துநர்க்கு உரிமமளித்தல் சட்டத்தின் 3(5) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 10 ஆம் பிரிவின் கீழ் துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2022 யூலை 07 ஆம் திகதிய 2287/24 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.05.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*23.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 1),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2023 மார்ச் 24 ஆம் திகதிய 2324/45 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.04.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*24.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 2),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2022 செப்டெம்பர் 09 ஆம் திகதிய 2296/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.10.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

25.

சர்வதேச லயன்ஸ் கழகம் மாவட்டம் 306ஏ-தேசிய அபிவிருத்தி மன்ற நம்பிக்கை நிதியம் (கூட்டிணைத்தல்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

26.

புகையிலை வரி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

27.

வைட் றோஸ் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

28.

ரொசான் ரணசிங்க ஜனசஹன மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

29.

மனித உரிமைகள் அமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

30.

சிவில் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

31.

சமாதானம், கல்வி வலுவூட்டல் மற்றும் அபிவிருத்தியிற்கான விளையாட்டு நிறுவகம் (SPEED) (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

32.

அவசரகால பொதுச் சுகாதாரச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

33.

கிழக்கு மீளெழுச்சி அமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

34.

இலங்கை ஐக்கிய கிறிஸ்தவ நட்புரிமை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

35.

சமாதி சுகாதார சேவைகள், சுற்றாடல், விவசாய, கலாசார மற்றும் விளையாட்டு நிலையம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

36.

தென்னிலங்கை மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தலைமைத்துவப் பயிற்சிபீடம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

37.

சஹன சமுதாய அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

38.

சமாதி தியான மன்றும் யோகாசன நிலையம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

39.

றுஹுணு உதானய அமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

40.

“மாத்தறைப் பருவம்” அமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

41.

இலங்கை காப்புறுதி நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

42.

விவாக (பொது) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

43.

முஸ்லிம் திருமணம், மணநீக்கம் (நீக்கம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

44.

தஸ்ஸனா பௌத்த சன்விதானய (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

45.

இலங்கை பிளாஸ்டிக் மற்றும் இறப்பர் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

46.

திருமணப் பதிவு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

47.

திருமணத்திற்கான ஆகக்குறைந்த வயது சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

48.

தொழில் வல்லுனர்களின் சமூக சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

49.

பாராளுமன்றத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

50.

மாகாணசபைத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

51.

இலங்கை மருந்தியல் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

52.

இலங்கை பட்டயக் கப்பல்தரகர்கள் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

53.

ஸ்ரீ லங்கா பெப்டிஸ்ட் சங்கம் (கூட்டிணைத்தல்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

[1] "சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

---